திரு. கே. எ. வகாப் : தூத்துக்குடியிலுள்ள இந்த உர உற்பத்திச் சாலை கனநீர் ஆலையுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென்ற கருத்திற்கு நம்முடைய மாநில அரசு எந்தவிதமான கருத்தைக் கொண்டிருக்கிறது ? அப்படி இல்லையென்றால் தனித்தனியாக அவற்றைச் செயல்படுத்த மாநில அரசாங்கத்தின் பங்கு என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது முழுக்க மத்திய அரசு நிபந்தனையோடு கட்டாயப்படுத்தி கொடுக்கப்பட்டதாகும். நாம் இதிலே முயற்சி எடுத்து இந்த உரத் தொழிற்சாலையோடு கனநீர் ஆலையும் வரவேண்டுமென்று வற்புறுத்தினோம். அப்போது காலஞ்சென்ற டாக்டர் சாராபாய் அவர்கள் பெருமுயற்சி எடுத்ததன் விளைவாக தூத்துக்குடி உரத் தொழிற்சாலையோடு இணைந்த வகையில் கனநீர் ஆலையையும் உருவாக்குவது வெற்றி பெற்றது.

திருப்பூர் துணைச் சிறைச்சாலை

*89 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் துணைச் சிறைச்சாலையில் சமையல் அறை மதிற்சுவர் கட்டும் வேலை எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: திருப்பூர் துணைச் சிறைச் சாலையில் ரூபாய் 17,000/— செலவில் புதிய சமையல் அறையும், உணவுக்கூடமும், குளியல் அறைகளும் கட்டுவதற்கான உத்தரவு இவ்வாண்டு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அங்கு மதிற்சுவர் கட்டும் வேலை தற்போது ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

குட்டைகள் அமைப்பு

* 90 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் S.F. No. 346, காசிபாளையம் கிராமம் வாரணாசிபாளையத்தில் குட்டை அமைக்கும் வேலை தற்போது எந்நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கோவை மாவட்டம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் ச. எண். 346, காசிபாளையம் கிராமம் வாரணாசிபாளையத்தில் ரூபாய் 1,67,000 மதிப்பீட்டுச் செலவில் ஒரு குட்டை அமைக்கும் திட்டம் வருவாய்த்துறை (உணவு உற்பத்தி) வாரியத்தின் ஆய்வில் உள்ளது. ஆனால் இது ஒரு சிக்கனமற்ற திட்டமாகும்.